(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 132.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 திசெம்பர் 03, சனிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

834/ ’16

1.

கௌரவ புத்திக பத்திரண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) கஞ்சா, அபின், போதை மாத்திரைகள், பாணி மருந்து, மதன மோதகம் மற்றும் அதனையொத்த போதைப்பொருட்கள் சமூகத்தில் துரிதமாக பரவியுள்ளதென்பதையும்;

(ii) இந்த போதைப்பொருள் வியாபாரம் பாடசாலைகளினுள்ளும் பரவியுள்ளதென்பதையும்;

(iii) பாடசாலை மாணவர்களும் இதற்கு அடிமையாகும் போக்கு நிலவுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி போதைப்பொருட்களுக்கு மேலதிகமாக பாடசாலைகளைச் சார்ந்ததாக பாவிக்கப்படுவதாக அறியவந்துள்ள வேறு போதைப்பொருள் வகைகள் யாவை;

(ii) 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் பாடசாலைகளை சார்ந்ததாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களையும் அதனோடு தொடர்புடைய பாடசாலை மாணவர்களையும் கைதுசெய்தல் இடம்பெற்றுள்ளதா;

(iii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி மாணவர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பாடசாலைகளினுள் போதைப்பொருட்கள் பரவுவதை தடுக்க மேற்கொண்டுள்ள ஏனைய நடவடிக்கைகள் யாவை;

(ii) அது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

988/ '16

5.

கௌரவ நளின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையினால் நிருவகிக்கப்படுகின்ற நுரைச்சோலை மின்வலு நிலையத்தை அமைப்பதற்காக பெற்றுள்ள மொத்தக் கடன் தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி கடன் தொகை இலங்கை மின்சார சபையினாலா, இன்றேல் பொதுத் திறைசேரியினாலா செலுத்தப்படுகின்றது என்பதையும்;

(iii) இலங்கை மின்சார சபையின் இலாபத்தை கணிப்பிடும்போது, நுரைச்சோலை மின்வலு நிலையத்தை அமைப்பதற்காக பெறப்பட்ட கடன் மற்றும் வட்டித் தவணைகள் செலுத்தப்படுதல் பற்றிய விடயம் கவனத்திற் கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

995/ '16

6.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்காபுத்ர வங்கியின் தலைவர் பதவியை வகித்த திரு. லசந்த குணவர்தன அந்த பதவியை வகிப்பதற்குப் பொருத்தமற்றவரென இலங்கை மத்திய வங்கி மற்றும்/அல்லது நாணயச் சபையினால் 2016 மார்ச் மாதம் 24 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டதென்பதையும்;

(ii) திரு. லசந்த குணவர்தனவுக்கு 2016 மார்ச் 24 ஆம் திகதியின் பின்னர் லங்காபுத்ர வங்கியில் தலைவர் பதவியை தொடர்ந்தும் வகிப்பதற்கு சட்டரீதியான உரிமை இல்லையென சட்டமா அதிபரினால் முடிவுசெய்யப்பட்டுள்ளதாக, 2016 செப்தெம்பர் 02ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியினால் இவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அந்த முடிவு அறிவிக்கப்பட்ட பின்னரும் இவர் வங்கியின் தலைவராக பணியாற்றியுள்ளார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

